**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 02.02.2026</u>**

**OS.44/2022**

**வா.சா.1 திரு. அழகரசன்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (Court Guardian)</u>**

1. இந்த வழக்கு எதற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இளங்கோ என்பவருக்கு பணம் கொடுத்துள்ளேன் அதனை வசூலிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இளங்கோவின் குழந்தைகள் மற்றும் இளங்கோவின் மனைவி ஆஷா என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இளங்கோ பாண்டு எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அவர் எப்போது அவ்வாறு எழுதி கொடுத்தார் என்றால் 15.11.2020. எவ்வளவு தொகைக்கு அவர் எழுதி கொடுத்தார் என்றால் ரூ.1,50,000/– ரூ.100க்கு ரூ.1 வட்டிக்கு பாண்டு எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் இளங்கோ வட்டி ஏதாவது கொடுத்தாரா என்றால் இல்லை. இளங்கோவன் உயிருடன் இருக்கும்வரை ஏதாவது வட்டி கேட்டேனா என்றால் கேட்டேன், அவர் தருவதாக சொன்னார் ஆனால் தரவில்லை. இளங்கோவன் எப்போது இறந்தார் என்றால் அவர் இறந்ததேதி எனக்கு தெரியவில்லை, நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார். நான் வட்டி தொழில் செய்கிறேனா அல்லது பைனான்ஸ் தொழில் ஏதாவது செய்கிறேனா என்றால் இல்லை, அவர் அவரசரத்துக்கு கேட்டார் பணம் கொடுத்தேன். நானும் இளங்கோவனும் ஒரே ஊரா என்றால் இல்லை, பக்கத்து ஊரை சார்ந்தவர்கள். எந்த வகையில் இளங்கோவன்

பழக்கம் என்றால் நான் ஆவின் கடை வைத்திருந்தேன் அவர் வரபோக எனக்கு பழக்கம்.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் புரோநோட்டை சாட்சிகள் முன்னிலையில் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் எந்த சாட்சிகள் முன்னிலையில் எழுதி கொடுத்தார்என்றால் சிவாஜி, பெருமாள் ஆகியோர் முன்னிலையில். மேற்படி சிவாஜி, பெருமாள் ஆகியோர் புரோநோட்டில் கையொப்பம் போட்டுள்ளார்களா என்றால் போட்டுள்ளார்கள். இளங்கோவன் பணம் வாங்கும்போது அவருடைய மனைவி ஆஷா இருந்தாரா என்றால் இருந்தார். ஆஷா ஏன் அந்த புரோநோட்டில் கையொப்பம் வாங்கவில்லை என்றால் அவரது கணவர் கையொப்பம் போட்டு பணம் வாங்கினார், ஆனால்ஆஷாவிடம் கையொப்பம் பெறவில்லை. என்னுடைய வாக்குமூலத்தில் இளங்கோவன் பணம் வாங்கும்போது அவரது மனைவி ஆஷாவும் உடன் வந்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. இறந்த இளங்கோவன் பெயரில் சொத்து ஏதாவது உள்ளதா என்றால் அவர் பெயரில் இல்லை, அவரது அப்பா பெயரில்தான் உள்ளது.

3. இளங்கோவன் பெற்ற கடன் இளவர்களின் நலனுக்காக பயன்படுத்தப்படவில்லை, இளங்கோவனின் சொத்துக்களும் இளவருக்கு எதுவும் வரவில்லை, அதனால் இளங்கோவன் தனிப்பட்ட முறையில் வாங்கிய கடன்அவருடைய இளவர் குழந்தைகளை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது இந்த வழக்கு இளவருக்கு எதிராக தள்ளுபடி செய்யக்கூடியத என்றால் சரியல்ல. இளங்கோவன் பெயரில் சொத்து இல்லாததால் அவருடைய

வாரிசுகளையே எந்த விதத்திலும் இளங்கோவன் பெற்ற தனிப்பட்ட கடன் கட்டுப்படுத்தாது அந்த வகையில் இளங்கோவனின் மைனர் மக்களையும் இளங்கோவன் பெற்ற கடன் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் இளங்கோவன் இறந்த பிறகுதான் நான் கொடுத்த கடனை கேட்டதாக சொல்லியுள்ளேன் அதனால் நான் இளங்கோவனுக்கு கடன்கொடுத்ததாக சொல்லுவதே சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்றால் சரியல்ல. இளங்கோவன் இறந்ததனால்அவரது இறப்புக்காக பணம் வருகிறது என்பதை தெரிந்து கொண்டு அக்கிரய லாபம் அடைய வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இளவர்களுக்கு பணம் வருவதை தெரிந்து கொண்டு இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளதால் 2, 3 மைனர் பிரதிவாதிகளை பொறுத்து இந்ததாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.02 16:42:00 +0530